**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | **:** | **SC NO. 76 / 2021** |
| **Deposition of witness for** | **:** | **PW : 16** |
| **Name** | **:** | **திரு. லட்சம்** |
| **Father's / Husband's Name** | **:** | |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **13.08.2024**

எதிரிகள் 1 முதல் 3 ஆஜர்.

**முதல் விசாரணை :**

நான் தற்போது, உத்தப்பநாயக்கனூர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு 28.01.2020 ம் தேதி நான் M கல்லுப்பட்டி காவல் நிலையத்தில் முதல்நிலை காவலராக பணிபுரிந்த போது, நிலைய குற்ற எண். 21/2020 பிரிவுகள் 294(b), 324, 506(2), IPC மற்றும் பிரிவு 4 of TNPHW Act @ 302 இதச வழக்கில், அன்றைய தினம் 21.00 மணிக்கு நிலைய சார்பு ஆய்வாளர் அவர்களின் உத்தரவுப்படி நான் நிலைய ஆஜரில் இருந்த போது, முதல் தகவல் அறிக்கை மற்றும் சட்ட திருத்த அறிக்கை கடவுச் சீட்டு கொடுத்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கொடுத்து வரும்படி கூறினார். அன்றைய தினம் 22.35 மணிக்கு

உசிம்பட்டி கனம் நீத்துறை நடுவர் எண்.2 அவர்களிடம் முதல் தகவல் அறிக்கை மற்றும் சட்ட திருத்த அறிக்கையைக் கொடுத்துவிட்டு, கடவுச் சீட்டில் கையொப்பம் பெற்று, பின்பு உசிலம்பட்டி காவல் துணை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் அதக் நகலைக் கொடுத்துவிட்டு, பின்பு மதுரை காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் அறிக்கை கொடுத்துவிட்டு மற்றும் தனிப்பிரிவு அலுவலகத்திலும் மற்றும் குற்றப்பதிவேடு அலுவலகத்திலும் பின்பு காவல் துணைத்தலைவர் அலுவலகத்திலும் கொடுத்து கடவுச் சீட்டில் கையொப்பம் பெற்று பின்னர் காவல் நிலையம் வந்து அறிக்கை செய்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்) :</u>**

M கல்லுப்பட்டிக்கும் உசிலம்பட்டிக்கும் இடையே சுமார் 25 கிமீ தூரம் இருக்கும். M கல்லுப்பட்டிக்கும் உசிலம்பட்டிக்கும் அடிக்கடி பேருந்து வசதிகள் உள்ளது. அதேபோல் M கல்லுப்பட்டிக்கும் உசிலம்பட்டிக்கும் இடையே ஆட்டோ போக்குவரத்தும் உள்ளது. நான் அலுவல் சம்பந்தமாக வெளியில் செல்லும்போது அது குறித்து பாக்கெட் டைரியில் குறித்துக் கொள்வேன். முதல் தகவல் அறிக்கை மற்றும் சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை ஆகியவற்றை, நீதித்துறை நடுவர் எண்.2 மற்றும் காவல் துணை கண்காணிப்பாளர் ஆகியோரிடம் கொடுத்துவிட்டு வந்தது பற்றி எனது பாக்கெட் டைரியில் குறிப்பிட்டுள்ளேன். இந்த வழக்கு சம்பந்தமாக என்னை விசாரணை செய்த அதிகாரியிடம், எனது பணிக்கு கொடுக்கப்பட்ட கடவுச் சீட்டு மற்றும் எனது பாக்கெட் டைரி ஆகியவற்றைக் கொடுத்தேன்.

அவற்றைப் பார்வையிட்டால், எங்குவைத்து, எத்தனை மணிக்கு அந்த ஆவணங்கள் என்னிடம் கொடுக்கப்பட்டது என்றும் எந்த எந்த அதிகாரிகளுக்கு எந்த ஆவணங்கள் கொடுக்கப்பட்டது போன்ற விபரங்கள் தெரியவரும் என்றால் சரிதான்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை